# அருளாளர் யோசவ்வாஸ்:
# எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும்

## *Bishop Deogupillai*

Endowment Lecture 2011

**24.10.2011**

Rev. Prof. G.Victor Pilendran

*Jaffna Diocesan Priests' Union*
*Bishop's House,*
*Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை
(முன்னாள் யாழ் ஆயர்)

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

# அருளாளர் யோசப்வாஸ் : எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும்

## ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப்பேருரை

வண. பேராசிரியர் ஞா.பிலேந்திரன்

யாழ் மறைமாவட்டக் குருக்கள் மன்று
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருளாளர் யோசப்வாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

# அருளாளர் யோசப்வாஸ் : எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும்

## முன்னுரை

இலங்கையில் கிறிஸ்தவம் என்னும் பொருள் ஐந்து நிலைகளாக நோக்கப்படலாம்.

1) பூர்வீக இலங்கையில் கிறிஸ்தவம் (1-6) நூற்றாண்டுகள்
2) போர்த்துக்கேயர் ஆட்சியில் இலங்கையில் கிறிஸ்தவம் (1505 - 1658)
3) ஒல்லாந்தர் ஆட்சியில் இலங்கையில் கிறிஸ்தவம் (1658 - 1796)
4) ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையில் கிறிஸ்தவம் (1796 - 1948)
5) சுதந்திர இலங்கையில் கிறிஸ்தவம் (1948 -

பேருரைக்கு எடுத்துக் கொண்ட விடயம் ஒல்லாந்தர் ஆட்சியில் இடம் பெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கியதெனினும், யோசப்வாஸ் அடிகள் (1651 - 1711) எதிர்கொண்ட சவால்களையும், அவரது வாழ்வு எமக்கு முன் வைக்கும் சவால்களையும், திருச்சபையின் வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் அவரது பங்களிப்பையும், அவரது வாழ்வு முன்வைக்கும் படிப்பினைகளையும், தெளிவாகப் புரிந்து கொள்ள, இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்து நிகழ்வுகளுடன் வாஸ் அடிகளின் வாழ்வின் நிகழ்வுகளையும் ஒப்பிடுதல் இங்கு நாம் முன்வைக்கும் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள ஏதுவாயமையும்.

### I

17ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இங்கு கிறிஸ்தவ மறையின் எதிர்கால வரலாற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது. போர்த்துக்கேயரின் ஆட்சியின் போது பெரும் செல்வாக்குடன் வேரூன்றி வேகமாகவும் பரவலாகவும் பரம்பிய கத்தோலிக்க மறையும் அதன் செல்வாக்கும் 1656இல் கொழும்பும், 1658இல் யாழ்ப்பாணமும் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்டதுடன் நாட்டின் எல்லா பாகங்களிலும் படிப்படியாக வீழ்ச்சி கண்டது.

இலங்கையில் கத்தோலிக்க மறை 16ஆம் நூற்றாண்டின் முற்கூற்றில் ஊன்றப்பெற்றாலும் இதே நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கம் இலங்கையின் வட பகுதியில் அறிமுகம் பெற்றிருக்கலாம்.[1] போர்த்துக்கேய ஆட்சியாளரின் அனுசரனையுடன் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் அறிவிக்கப்பட்ட போதும் கத்தோலிக்க மறையினுள் உள்வாங்கப்பட்டோருக்கு ஊக்குவிப்பாக பொருளாதார, சமூக அந்தஸ்து முதலான அனுகூலங்கள் வழங் கப்பட்டமை மறுக்கப்பட முடியாத வரலாற்று உண்மையாகும்.[2] அதே வேளை, வலுக்கட்டாயமாகக் கத்தோலிக்கம் சுதேச மக்கள் மீது திணிக்கப்பட்டது எனச் சிலர் முன்வைக்கும் குற்றவாதம் ஆதாரமற்றது என்பது வரலாற்று ஆசிரியர் எஸ். ஜி. பெரேரா என்பவரது கருத்தாகும்.[3]

போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இடம் பெற்ற நிகழ்வுகளை சமய, சமூக வரலாற்றுப் பின் புலத்தினின்று அணுகும் போது பல மட்டுப்பாடுகள், குறைபாடுகள் முன்வைக்கப்பட்ட போதும், கத்தோலிக்க விசுவாசம் மக்கள் வாழ்வில் ஆழமாக வேரூன்றப் பெற்றமைக்கு சில வரலாற்றுக்காரணிகளையும் முன்வைக்கலாம். மேலும், அரசியல் இலாபம் கருதியும், கல்வி, சமூகப் படிநிலை உயர்வு கருதியும் சிலர் கத்தோலிக்க மறையைத் தழுவியிருந்தாலும் கத்தோலிக்க மறை முன்வைத்த விசுவாச உண்மைகளை உள்ளூர உணர்ந்து சமய நெறிகளிலும் போதனைகளிலும் பற்றுக்கொண்டு கத்தோலிக்கத்தைத் தழுவியோருமுண்டு என்பதை நிரூபிப்பதற்கு சில வரலாற்று நிகழ்வுகளை ஆதாரங்களாக முன்வைக்கலாம்.

1) ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினர் பிரகடனப்படுத்தியி ருந்த கடும் தண்டனைகள், எச்சரிக்கைகள், அடக்குமுறைச் சட்டங்கள் மத்தியிலும் யோசப்வாஸ் அடிகள் மக்களால் வரவேற் கப்பட்டு ஆதரவு வழங்கப்பட்டமை.
2) முப்பது வருடங்களுக்கு மேலாக எவ்விதக் குருக்களின் உதவியு மின்றி பக்தி முயற்சிகள் வழியாக மக்கள் ஆபத்துக்கள் மத்தியி லும் விசுவாசத்தை காத்தமை.[4]
3) மன்னாரில் 600 - 700 இற்கும் அதிகமானோர் இரத்தம் சிந்தி மறை சாட்சிகளாக சான்று பகர்ந்தமை[5] இவற்றுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேய – ஐரோப்பிய மேலாண்மை நிலை கருத்தியல்

மிசனறி என்னும் பதம் ஐரோப்பிய நாடுகளின் மறைத்தூதுவர்களுடன் நெருங்கிய முறையில் தொடர்புடைய ஒரு பதமாகும். ஐரோப்பிய நாடுகளிலிருந்து 15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பொருளாதார வளத்தையும், அரசியல் ஆதிக்கத்தையும், அதிகார மேலாண்மையையும் நிலைநாட்டி தம் நாட்டின் செல்வாக்கை அகலப்படுத்துதலின் ஓர் அங்கமாகவே மிசனறிமாரும் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளுக்கு சென்றனர் எனக் கொள்வதில் தவறில்லை.

இலங்கையில் கத்தோலிக்கம் பரப்பப்பட்டமையை வரலாற்றை ஐரோப்பிய மேலாண்மைவாத, இராணுவ ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டின் பின்புலத்திலின்று நோக்குவதே பொருத்தமானது.

1) இலங்கையில் போர்த்துக்கேய மறை பரப்பாளர்கள் (மிஷனறிமார்) மறை பரப்புப் பணியை மேற்கொண்ட போது கண்டி அரசு தவிர்ந்த ஏனைய பகுதிகள் எல்லாம் போர்த்துக்கேய இராணுவத்தினரின் ஆட்சிக்கும், நிர்வாகத்திற்கும் உட்பட்டதாகவே விளங்கின. இதனால் மறை பரப்பு பணியில் போர்த்துக்கேய இராணுவத்தினர் மறைமுகமாகவோ அல்லது நேராகவோ தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இதற்கு யாழ்ப்பாணத் தளபதி பிலிப் தெ ஒலிவீரா என்பவரின் செயற்பாடுகள் தெளிவான உதாரணங்களாகும்.[6]

2) மறை பரப்புப் பணியை மேற்கொண்டிருந்த போர்த்துக்கேய மறை பரப்புப் பணியாளரிடமும் தொடர்ந்து ஐரோப்பாவிலிருந்து ஆங்கிலேயர் காலத்தில் வருகை தந்திருந்த மறை பரப்புப் பணியாளரிடமும் ஐரோப்பிய மேலாண்மைக் கருத்தியல் ஆழமாக வேரூன்றி இருந்தது. இலங்கையில் பணியாற்றிய ஆண், பெண் துறவற சபைகள் எவையும் இதற்கு விதிவிலக்காகச் செயற்படவில்லை ஆயர்கள் ஒறாசியோ பெற்றக்கினி, யோசப் பிறாவி, செமேரியா, யூஜின் டி மெசனட் என்போரிடமும் ஐரோப்பிய மேலாண்மை நிலைக் கருத்தியல் காணப்பட்டதாக போ்ணியோலா அடிகள் குறிப்பிடுகின்றார்.[7]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஐரோப்பிய மேலாண்மைக் கருத்தியல் என்பது ஐரோப்பியம் மட்டுமே நாகரிகமானது அதாவது "ஐரோப்பியம் என்பது நாகரிகம். நாகரிகம் என்பது ஐரோப்பியம்" என்பதாகும். எதுவெல்லாம் ஐரோப்பியமோ அவை மட்டுமே நாகரிகமானது, உயர்ந்தது பரப்பப்படவேண்டியது போற்றுதற்குரியது. ஐரோப்பிய வாழ்க்கை முறை, மத நம்பிக்கை, கல்விமுறை, பண்பாடு பழக்கவழக்கங்கள் மட்டுமே நாகரிகமானது. சுதேசிகள் வாழ்க்கை முறை முற்றாக ஐரோப்பிய மயப்படுத்தப்பட வேண்டும். எனவே, ஒருவர் கிறிஸ்தவர் என்றால் அவர் முதலில் ஐரோப்பியராக மாற வேண்டும். ஐரோப்பியத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒன்றிலிருந்து மற்றையதைப் பிரிக்க முடியாதென்பது போர்த்துக்கேய மறை பரப்புப் பணியாளரின் கருத்தியலாயிருந்தது. திருச்சபையின் ஆட்சிப் பீடமும் கற்பித்தல் கோட்பாடும் இக்கருத்தியலில் வேறுபட்டிருக்க வில்லை.

4) கிறிஸ்தவம் முன்வைக்கும் கோட்பாடுகள் மட்டுமே உண்மையானவை, மீட்பையளிக்க வல்லவை, இதனால் சுதேசிகள் கடைப் பிடித்த மத நம்பிக்கைகள் பொய்யானவை போலியானவை, மக்களின் மீட்பிற்கு பயனளிக்காதவை. இக்காலப்பகுதியில் மட்புத் தொடர்பாகத் திருச்சபை கொண்டிருந்த கோட்பாடும் இக்கருத்தையே கடுமையாக வலியுறுத்தியிருந்தது. அதாவது "திருச்சபைக்குள் மட்டுமே மீட்பு உண்டு. திருச்சபைக்கு வெளியே மீட்பு இல்லை" இக்கருத்தியலின் பின் புலத்தில் சுதேச மதங்களின் வழிபாட்டுச் சின்னங்கள் ஆலயங்கள், விகாரைகள் அழிக்கப்படுவது நற்செயற்பாடாகவே மிஷனறிமாரால் கருதப் பட்டது. சுதேச மதங்களின் வளங்கள் பறிக்கப்பட்டு கத்தோலிக்கமத நடவடிக்கைகளுக்கு அளிக்கப்பட்டது.[8]

5) இப்பின்புலத்திலே சுதேச இளைஞர்கள் குருக்களாக உருவாக்கப்படத் தகுதியற்றவர்களாகக் கணிக்கப்பட்டனர். இலங்கை ஒரு நூற்றாண்டு காலக்கிறிஸ்தவத்தின் வரலாற்றின் பின்பும் சுதேச கத்தோலிக்க இளைஞர்களைக் குருக்களாக உருவாக்கத்தவறியதன் கடும் பாதகமான விளைவுகளை ஒல்லாந்த ஆட்சி மாற்றத்தின் பின்பே போர்த்துக்கேய மறை பரப்பாளர்கள் உணர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) இந்திய ஒரற்ரோறியன் சபையின் தோற்றத்திற்கும் போர்த்துக் கேயக் குருமாரிடம் நிலை கொண்டிருந்த இக்கருத்தியலே காரணமாயமைந்தது. இந்திய குருக்கள் எவரையும் போர்த் துக்கேய துறவற சபைகள் ஏற்றுக்கொள்ள மறுத்தன. இப்பின்ன ணியிலேயே குழுமமாக வாழ விரும்பிய இந்திய மறை மாவட்ட குருக்கள் பாஸ்கல் தெ கொஸ்தா (Paschol da Costa) என்னும் குருவின் தலைமையில் ஒரற்ரோறியன் சபையை ஆரம்பித்தனர்.

## ஆசியத்திருச்சபையில் ஐரோப்பிய மேலாண்மை

முற்போக்கு நிலையில் உரையாடல் என்னும் மையப்பொருளைக் கொண்டு கூட்டப்பெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்க அமர்வுகளின்போது கிறிஸ்தவத்தின் பண்பாட்டு மயமாக்கல் என்னும் எண்ணக்கருவும் செயற்பாடும் கூர்மை பெற்றதுடன் பலரின் ஆதரவையும் பெற்றது. எனினும், இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு தென்இந்தியாவில் இயேசு சபை அருட்பணியாளர் டீ நொபிலியும் (1577 - 1656), சீனாவில் மத்தியூ ரிச்சி (1552 - 1610) அடிகளும் தாம் பணியாற்றிய மக்களின் பண்பாட்டுத் தூலங்களுக்கு மதிப்பளித்து, அப்பண்பாட்டு நிலைகளிலிருந்து மக்களை அந்நியப்படுத்தாது அவற்றை ஊடகமாகக் கொண்டு மறைபரப்புப் பணியை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

## தென்னிந்தியாவில் றொபேட் டீ நொபிலி, சீனாவில் மத்தியூ ரிச்சி

இவர்கள் இருவரும் கடைப்பிடித்த பண்பாட்டுமயப்படுத்தப்பட்ட மறைபரப்பு முறைகள் பற்றி திருஆட்சிபீடத்திற்கு பல குற்றச்சாட்டு எதிர்ப்பு மனுக்களும், அறிக்கைகளும் அனுப்பப்பட்டதனால் இவை பற்றிய களநிலை ஆய்வை மேற்கொண்டு உண்மை நிலைபற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி திருத்தந்தை XI ஆம் கிளமென்ற் (1700 – 1721) ஆயர் சாள்ஸ் தோமா மைலர் தெ ருணோ[9] (Charles Thomas Maillard de Tournon) என்பவரை பணித்தார். இவர் இந்நாடுகளுக்கு வருகை தருவதற்கு முன்பே உரோமாபுரியில் பண்பாட்டு மயமாக்கலுக்கு எதிரான பல பக்கச்சார்பான கருத்தூட்டலுக்கு உட்பட்டிருந்தார். இப்பின்னணியில் தென்னிந்தியாவில் மதுரை மிசனைத் தரிசித்தவர் அங்கு டீ நொபிலி அடிகளின் பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையையும், மறைபரப்பு முறைமைகளையும் கண்டித்து எச்சரித்து டீ நொபிலி அடிகளுக்கெதிராக அறிக்கை சமர்ப்பித்திருந்தார். ஆயர் தெருணோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்த தவறான அணுகுமுறை டீ நொபிலி அடிகளின் பணிக்குப் பெரும் தடையையும் மதுரைப்பணிக்களத்திற்குப் பெரும் பின்னடைவையும் ஏற்படுத்தியது.

மத்தியூ ரிச்சி அடிகளின் மறைபரப்பு முறைகள் பற்றிய கள ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க சீனா சென்ற ஆயர் தெ ரூணோ அவர்கள் ரிச்சி அடிகள் கடைப்பிடித்த சீனப்பண்பாட்டு சடங்காசார முறைமைகளை உள்ளடக்கிய மறைபரப்பு முறைமைகளையும் கண்டனம் செய்தார். ஏற்கனவே சீனாவில் மறைபணியாற்றிய ஏனைய பல குருக்களும் மத்தியூ ரிச்சியின் மறைபரப்பு முறைமைகளை கண்டித்திருந்தனர். இதனால் கடும் சினமும், வெறுப்பும் கொண்ட சீனச் சக்கரவர்த்தி கா கிஷ்சி (k Hsi), ஆயர் ரூணோவை சிறையிலிட்டதோடு, சீனாவில் ஆயரி ரூணோவின் நிலைப்பாட்டை ஆதரித்த ஏனைய குருக்களை உடனடியாக நாட்டிலிருந்து வெளியேற்றினார். இதன் விளைவாகச் சீனத்திருச்சபை பெரும் பின்னடைவை எதிர்நோக்கியது.[10]

இப்பின்னணியில் வாஸ் அடிகள் கடைப்பிடித்த மறை அறிவிப்பு முறைமையை நோக்கும்போது அவர் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையிலிருந்து சமய வாழ்வை அந்நியப்படுத்தாது, மக்களின் பாரம்பரி யங்களுக்கும், பண்பாட்டு பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளித்து தூர்ந்து கொண்டிருந்த கத்தோலிக்க விசுவாசத்திற்கு புத்துயிரளித்தார்.

ஐரோப்பிய மேலாண்மைவாத நிலையின் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த விளைவே சுதேச மதங்களான இந்து பௌத்த மதங்கள் இன்றும் கிறிஸ்தவ மதங்களின் செயற்பாடுகளை சந்தேகம் கொண்டு நோக்குவதற்கும் குரோத உணர்வுடன் செயற்படுவதற்கும் மதங்களுக் கிடையே சீரான உறவு பேணப்படுவதற்கும் தடையாய் அமைந்துள்ளன.

## கிறிஸ்தவமல்லாத மதங்களும், வாஸ் அடிகளும்

திருச்சபை வழியாக மட்டுமே ஒருவர் மீட்படைய முடியும். கிறிஸ்த வரல்லாத மக்களுக்குத் திருமுழுக்கு அளிப்பது திருச்சபையின் பாரிய பொறுப்பு என்னும் கருத்தியல் வலுப்பெற்றிருந்த வரலாற்றுப் பின்னணி யிலேயே போர்த்துக்கேயர் இலங்கையில் மறையைப்பரப்பினர். இவ்வே ளையில் சுதேச மதங்களை போர்த்துக்கேயர் மதிக்கவில்லை. பௌத்த, இந்து மதத்தவர்கள் "அஞ்ஞானிகள்" "pagans" என்னும் பதங்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப் பெற்றனர். இவர்களை மதம் மாற்ற வேண்டும் எனச் சிந்தித் தனரேயொழிய, சுதேசிகளின் உள உணர்வுகளையோ, மத உணர்வுக ளையோ மதிக்கவில்லை. சுதேச மதங்கள் பற்றியோ, கலாசாரம் பற்றியோ எதுவித அறிவும் பெற்றிராத போர்த்துக்கேய குருக்கள் மதமாற்றம் பற்றி மட்டுமே சிந்தித்தனர்.

பௌத்த, இந்து மதங்களுக்கும் இம்மதங்கள் சார் மக்களுக்கும் இழைக்கப்பட்ட இடையூறுகள் பல மனக்குரோதங்கள் மற்றும் பாதகமான பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. தர்மபாலனின் பின்பு கோட்டை அரசின் ஆட்சி போர்த்துக் கேயரின் கைமாறியதும், பௌத்த மதத்திற்குரிய நிலபுலங்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டது குறுகிய நோக்குக் கொண்ட, தவறான செயற்பாடுமாகும். பௌத்த மக்கள் உள்ளம் நொந்திருக்கும் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.[11]

யோசப்வாஸ் அடிகள் பிறமதங்கள் மட்டில் நிதானமாகவும் மனிதநேயத்துடனும் நடந்துகொண்டார். சுதேச மதத்துடனோ மக்களுடனோ முன்தொடர்பற்ற நிலையில் தவறான கருத்தியலின் பின்ன ணியிலேயே போர்த்துக்கேயக் குருமார் தம் பணியை ஆரம்பித்தனர். வாஸ் அடிகள் கத்தோலிக்க சூழல் நிறைந்த கோவாவில் பிறந்து வளர்ந்தாலும், கன்னடத்தில் பணியாற்றிய காலத்திலும், ஏனைய அநுபவங்கள் வழியும் இந்து மதத்தவர்களின் ஆன்மீகம், மதப்பற்று, வாழ்க்கைமுறை பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அம்மக்களின் உணர்வுகளை நன்கு அறிந்திருந்தார். அவற்றை மதித்தார். இதனால் அவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். பௌத்த மன்னர்கள் இவருக்கு வழங்கிய மரியாதையும், கௌரவமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.[12]

## மறை அறிவிப்பின் புதிய கோணம்

கத்தோலிக்க மறையை ஆசிய நாடுகளுக்குப் பரப்பும் பொறுப்பு போர்த்துக்கேய மன்னனிடம் பத்துருவாதோ உடன்படிக்கை வாயிலாக வழங்கப்பட்டது. இதனால் மறை அறிவிப்பு போர்த்துக்கல் இராணுவத்தினரின் ஆட்சி அதிகார விரிவாக்கத்துடன் தொடர்பு பெற்ற ஒரு விடயமாகவே விளங்கியது.[13] போர்த்துக்கேய அரச ஆட்சிப்பலத்துடன் மறையைப் பரப்புவது சலுகையாக அமைந்தபோதும் ஒட்டு மொத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும்போது இது பெரும் எதிர்மறை விளைவைத் தோற்றுவித்தது கருத்திற் கொள்ளப்படவேண்டியது.

போர்த்துக்கேய ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற போர்களில் ஏற்பட்ட இரத்தக்களரிகள், இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடூர செயற்பாடுகள், சுதேச சமயங்களுக்கெதிரான அடக்குமுறைகள், புனித தலங்களின் அழிவுகள், இராணுவ அதிகாரிகளின் சுரண்டல்கள், இராணுவத்தினரின் பல துன்மாதிரியான செயற்பாடுகள் - திருச்சபையையும் வெகுவாகப் பாதித்தது.[14] திருச்சபைக்கும், போர்த்துக்கேய இராணுவத்திற்குமிடையே விளங்கிய நெருங்கிய உறவு இவ்வாறான செயற்பாட்டிற்குக் காரணமாயமைந்தது. சுதேசிகள் போர்த்துக்கேய இராணுவத்தினரை மட்டுமன்றி இவ்வாறான வெறுக்கத்தக்க செயற்பாடுகளைக் கடைப்பிடித்தோரின் மதத்தை எதிர்த்ததும், வெறுத்ததும் இயல்பானதே. அன்று வித்திடப்பட்ட குரோதப்போக்கு இன்றும் ஆங்காங்கே வெளிக்கிளம்பிக்கொண்டேயிருக்கின்றது.[15]

போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறை பரப்பப்பட்ட பின்னணியுடன், யோசப் வாஸ் அடிகள் மறை பரப்பு பணியை முன்னெடுத்த பின்னணி முற்றும் மாறுபட்டதாகவே காணப்பட்டது. இலங்கையில் எல்லோராலும் கைவிடப்பட்ட துன்புறும் மக்களுக்குப் பணியாற்றும் நோக்குடன் மட்டுமே அடிகளார் இங்கு வந்தார். அவரது பணியின்போது எந்த இராணுவ பக்கபலமோ அரச ஆதரவோ இருக்கவில்லை. அவரது பணியின் தாரக மந்திரம் துன்புறும் மக்களில் இறைவனைக் காண்பதும், அவர்களுக்குப் பணியாற்றுவதுமாகும். போர்த்துக்கேய உளவாளி எனச் சந்தேகத்தின் பின்னணியில் கைது செய்யப்பட்டபோதும் உண்மைநிலை அறிந்த சிங்கள மன்னர்களின் ஆதரவு, உதவி என்பன மக்களிடையே இவர் நன்மதிப்பை பெறுவதற்கு உறுதுணையாக அமைந்தன. பௌத்த மன்னர்களான விமலதர்மசூரிய II (1687 - 1707) நரேந்திரசிங்க (1707 - 1739) ஆகிய இருவரும் இறை மனிதனாக இவரை இனம் கண்டனர்.[16] இவரது மறைபரப்பு பணி வெற்றியாயமைந்தமைக்கு இதுவும் முக்கியமானதோர் காரணியாகும். கத்தோலிக்க மறையை முன்பு பரப்பியவர்கள் (போர்த்துக்கேயர்) தற்போதைய மனிதர் யோசப் வாஸ் இவர்கள் இருவருக்கிடையேயும் நிலவிய வித்தியாசத்தை மக்கள் நன்கு நோக்கியிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான, எளிமையான முறையில் பௌத்த மதம் இலங்கையில் பரப்பப்பட்டதுபோன்று கத்தோலிக்க மறையும் அமைதியான, எளிமையான முறையில் பரப்பப்படலாம் என்பதை யோசப்வாஸ் அடிகளின் வாழ்வு எடுத்தியம்பியது.

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

## II

## யோசப் வாஸ் பிறப்பும், இளமைப்பருவமும்

யோசப் வாஸ் 21 ஏப்பிரல் 1651 இல் கிறிஸ்ரோப்பர் வாஸ், மரியதெ மிரண்டா என்னும் கொங்கோணி மொழி பேசும், பிராமண பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக கோவாவிலுள்ள பெனோலிம் என்னும் இடத்தில் பிறந்தார். எளிமையான இக்குடும்பம் கத்தோலிக்கப் பாரம்பரியங்களை இறுக்கமாகக் கடைப்பிடித்தமையினால் பிள்ளைகளும் விசுவாசத்தில் உறுதி பெற்றவர்களாக வளர்ந்தனர். தந்தை ஊராகிய சாங்கோலேயில் ஆரம்பப் பாடசாலைக்கல்வியையும், புனித பவுல் கல்லூரியில் இலக்கணக்கல்வியையும் கற்று, தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பெற்ற புனித தோமஸ் அக்குவைனஸ் உயர்கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இவர் தமது 20வது வயதில் குருத்துவப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து அதற்கான பயிற்சிகளைப்பெற்று 1676 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1676 முதல் 1681 வரையிலுமான காலப்பகுதியில் கோவாவில் பணியாற்றும் போதே இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலைபற்றி கேள்வியுற்று இலங்கை செல்வதற்குத் தீர்மானித்தார்.[17]

வாஸ் அடிகளின் வாழ்வையும், இலங்கைத்திருச்சபையின் வரலாற்றையும் முற்றாக மாற்றியமைத்த இத்தீர்மானமே வாஸ் அடிகளின் வாழ்வில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இவரது சககுருக்கள் எவரும் இவரது இத்திட்டத்தை ஆதரிக்கவில்லை. இப்பணியில் இலங்கைக்குப் பணிசெய்யக் குருக்களை அனுப்புவதற்கென கோவாவில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு வாஸ் அடிகள் சென்றார். இலங்கையில் பணியாற்ற வாஸ் அடிகள் முன்வந்தமை கோவா குருக்கள் அவைக்கு மகிழ்ச்சியளித்தாலும், அவர் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும் படி பணிக்கப்பட்டார். கத்தோலிக்க மறையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையில் இலங்கையில் நிலவிய அதே சூழலே கன்னடத்திலும் நிலவியது. வாஸ் அடிகள் தமது ஆன்மீகக் குருவிடம் அறிவுரை பெற்றபோது ஆன்ம குருவும் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும்படி அறிவுரை வழங்கினார். கன்னடமும் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினரின் ஆளுகைக்குட்பட்டிருந்தாலும், நிர்வாகமையம் கொழும்பிலிருந்தே செயற்பட்டது. இதனால் கன்னடத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்குமென ஆன்ம குரு தெளிவாக எடுத்துரைத்திருந்தார். 1681 முதல் 1684 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றினாலும, இலங்கை நிலவரம் பற்றியும், இலங்கை செல்வது பற்றியும் அறியக்கூடிய விடயங்களை அறிந்துகொள்வதில் வாஸ் அடிகள் கவனமாயிருந்தார். தம்மை அடிமையாக விற்கும்படி பல தடவைகள் கோரியிருந்தார் இக்கோரிக்கை மறுக்கப்பட்டது.

## பத்துருவாதோ

ஸ்பானிய, போர்த்துக்கேய நாட்டு மன்னர்கள் கீழைத்தேச நாடுகளில் படையெடுப்பை மேற்கொண்டு கத்தோலிக்க மதத்தை இந்நாடுகளில் பரப்புவதை ஊக்கப்படுத்த இந்நாடுகளின் மன்னர்களுடன் கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையர்கள் தனித்துவமான பண்புகளை உள்ளடக்கியதான ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டனர். இதன்படி இந்நாடுகளின் குடியேற்ற மறைமாநிலங்களின் மேல் ஸ்பானிய, போர்த்துக்கேய மன்னர்களுக்கு சில சிறப்பான உரிமைகளும், கடமைகளும், திருத்தந்தையர்களினால் வழங்கப்பட்டன. இது ஞான அதிகாரச் சலுகைகள். உரிமைகள் எனவும், பத்துருவாதோ எனவும் அழைக்கப்பட்டது. இவ்வுடன்பாடு கால மட்டுப்பாடுகளுக்கு உட்படாத உடன்படிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டது. எனினும், காலக்கிரமத்தில் சிறிய நாடாகிய போர்த்துக்காலின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு பரந்த நிலப்பரப்பைக் கொண்டு இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதென்பதை அறிந்த பாப்பரசர் 15ஆம் கிறகோரியார் யூலை 1622இல் விசுவாசப் பரம்புதல் சபையை நிறுவினார். இந்த நிகழ்வானது உள்நாட்டில் குறிப்பாக இந்தியத் திருச்சபைக்குள் பல உள்ளக முரண்பாடுகளைத் தோற்றுவிக்க, தென் இந்தியாவில் திருச்சபை பல பின்னடைவை எதிர் கொண்டமை இப்பின்னணியிலேயே நோக்கப்பட வேண்டும்.[18]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ் அடிகள் எதிர்கொண்ட சவால்கள்

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து 1658இல் முற்றாக வெளியேற்றிய ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர், இங்கு தங்கள் நிலையை உறுதிப்படுத்த முன் எச்சரிக்கையுடன் பல முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இலங்கைக்கான ஒல்லாந்தரின் வருகை அரசியல், பொருளாதார காரணிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. குறிப்பாக நோக்கின்,

1) தங்கள் நாட்டின் ஆட்சி, அதிகாரத்தை அகலப்படுத்தி இங்கு அதனை நிலை நிறுத்துவதையும்,

2) இலங்கையுடன் வர்த்தகப் பரிமாற்றத்தை ஏற்படுத்தி, தம்நாட்டின் வளத்தைப் பெருக்குவதையும்,

3) மேற்குறிப்பிட்ட இரண்டு இலக்குகளையும் அடைவதற்கும், மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் ஒல்லாந்த சீர்திருத்த மறையை இலங்கையில் பரப்பவும் முனைந்தனர்.

இப்பின்னணியில் மீண்டும் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்ற முயலும் போது, கத்தோலிக்கர் அவர்களுக்கு உள்நாட்டிலிருந்து ஆதரவு அளிக்காவண்ணம் கத்தோலிக்க மறைக்கு எதிராகப் பல தடைச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தினர். இத்தடைச் சட்டங்கள் வாஸ் அடிகளின் பணிக்குப் பெரும் சவாலாய் அமைந்தன.[19] இச்சவால்கள் மத்தியிலேயும் வாஸ் அடிகளின் பணிகள் சிறப்பாய் அமைந்தன.

### III

## வாஸ் அடிகளின் பணி சிறக்க உதவிய காரணிகள்

இலங்கையிலிருந்து போர்த்துக்கேயர் முற்றாக வெளியேற்றப்பட்டு 29 வருடங்களின் பின்பு வாஸ் அடிகள் வந்தாலும், பல கத்தோலிக்க மக்கள் இரகசியமாக தங்கள் விசுவாச வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர். இதற்கு ஏதுவாயமைந்த பல வரலாற்றுக் காரணிகளை முன்வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்சிஸ்கன், இயேசு சபையினர் நிறுவிய ஆழமான அடித்தளம்

1543 முதல் இலங்கையில் கத்தோலிக்க மறையை பரப்பும் நோக்குடன் வருகை தந்த பிரான்சிஸ்கன் சபைக் குருமார் இலங்கையின் தென்கரையோரங்களிலே வாழ்ந்த மக்கள் மத்தியில் மறையைப் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டினர். கரையோரக் கிராமங்களில் ஆழமான மதப்பற்றை ஏற்படுத்துவதில் இவர்களின் பங்களிப்பு முதல் நிலை முக்கியத்துவம் பெறுகின்றது. 1602 இல் இலங்கைக்கு வருகை தந்த இயேசு சபைக்குருமார் உள்நாட்டில் மறை அறிவிப்பு பணியை மேற்கொண்டனர். இயேசு சபைக்குருமார் இலங்கையின் வட பகுதியில் பன்னிரு நிலையங்களை நிறுவி,[20] மறைபரப்புப் பணியை ஆர்வத்துடன் ஆற்றினார். இவற்றுள் ஒன்று பண்டத்தரிப்பில் அமைந்திருந்தது. பண்டத்தரிப்பில் பணியாற்றிய இயேசு சபைக் குருமாரே சில்லாலைப் பகுதியிலுள்ள மக்களைக் கத்தோலிக்க மறையில் இணைத்து அவர்களுக்கு ஆழமான மதப்பற்றையும், மறை அறிவிப்பையும் அளித்தனர் என உறுதிபடக்கூறலாம்.[21] இலங்கையின் வட பகுதியில் இயேசு சபைக் குருமாரால் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்பட்ட நிலையங்களில் ஆலயம், பங்குமனை, பங்குப் பாடசாலை, நிரந்தர நாடகமேடை என்பன அமைந்திருந்தன.[22] இவ்வாறான வசதிகளை நன்கு பயன்படுத்தி இயேசு சபைக்குருமார் ஆழமான மறை அறிவை வழங்கினர் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்து. சில்லாலை மக்கள் மத்தியில் கத்தோலிக்க மறை ஆழமாக நிலை பெற்றமையை இப்பின்புலத்தில் அணுகுவதே பொருத்தமானது.

## ஒரற்ரோறியன் சபை வழங்கிய பங்களிப்பு

இந்தியாவில் குறிப்பாகக் கோவாவில் பணியாற்றிய துறவற சபைகளில் ஐரோப்பியக் குருக்கள் மட்டுமே அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். சுதேச குருக்கள் விரும்பினாலும் இதில் இணைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாஸ்கல் தெ கொஸ்ரா ஜெரோமியா என்னும் மறை மாவட்டக்குரு விரும்பிய சுதேச குருக்கள் குழுமமாக வாழ்வதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆரம்பத்தில் மூவர் இதில் இணைந்தபோதும், இம்முயற்சி வெற்றிய ளிக்கவில்லை. எனினும், இலங்கை செல்வதற்கு இறுதி முடிவையும் மேற்கொண்டிருந்த யோசப் வாஸ் இக்குழுவில் இணைந்து தலைமைப் பொறுப்பேற்று புத்தூக்கம் அளித்து புனித பிலிப்புநேரியாரின் ஒரற்ரறியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நிறுவினர். இவரைத் தொடர்ந்து குருக்கள் பலர் இதில் இணைந்ததால் இக்குழுமம் புதுப்பொலிவும், புத்தாக்கமும் பெற்றது.

இது ஒரு துறவறசபையல்ல. இதன் அங்கத்தவர்கள் துறவற வாக்குறுதிகள் எடுப்பதில்லை. மறைமாவட்டக்குருக்கள் குழுமமாக சில ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வாழ்வதாகும். இலங்கை செல்வதில் முனைப்பாக இருந்த வாஸ் அடிகள் இக்குழுமத்தில் இணைந்து அதற்கு புத்தாக்கம் அளித்தது மனித அறிவினால் புரிந்து கொள்ளமுடியாதது. ஓரற்றறியில் இணைவதற்கு வாஸ் அடிகள் மேற்கொண்ட தீர்மானம் இறை வழிநடத்தலில் இடம்பெற்றதெனக் கொள்வதே ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமாயமைகின்றது.

1687 முதல் 1835 வரையும் இயங்கிய இந்த குழுமத்தின் வரலாற்றை நோக்கும் போது இது இலங்கையில் கத்தோலிக்கத்தைக் காக்க ஏற்படுத்தப்பட்டதாகவே தென்படுகிறது. இலங்கையில் கத்தோலிக்கம் காக்கப்பட்டமைக்கு ஓரற்றறிக் குழுமத்தினர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது மறக்கமுடியாத வரலாற்று உண்மையாகும். 150 ஆண்டுகள் ஓரற்ரோறியன் சபை இலங்கைத் திருச்சபைக்கு குருக்களை வழங்கிக் கொண்டிருந்தது.[23]

## மறைத்தூதுப் பயணங்கள்

மக்கள் தரிசிப்பிற்கு இலங்கையில் பணியாற்றும் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் யோசப் வாஸ் அடிகள். ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களைத்தரிசிப்பதில் பல ஆபத்துக்களையும், பிரச்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்பகுதிகளில் மாறுவேடத்தில், இரவுவேளைகளில் மட்டும் மக்களைத் தரிசிக்க முடிந்தது. ஒல்லாந்த இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பின் மத்தியிலேயே இவரது இல்லத்தரிசிப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாறு இவர் மேற்கொண்ட பயணங்களின்போது காடுகள், முதலைகள் நிறைந்த ஆறுகள், கரடுமுரடான பாதைகளையும் வெறும் காலுடன் நடந்தே கடந்தார். ஆபத்தான விலங்குகள் நிறைந்த காட்டுப்பாதைகளை நடந்து கடந்ததுடன் காடுகளிலேயே இரவையும் கழித்ததுண்டு. ஏனையோர் தூங்கும் போது இவர் விழித்திருந்து சாமக்காவலை மேற்கொண்டார்.

வாஸ் அடிகள் வாழ்வில், உடன் பணியாளருக்கான ஊக்கப்படுத்தலும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலும் அதிகம் இடம் பெற்றுள்ளமை பற்றிக்கூறும் ஆவணக்குறிப்புக்கள் அதிகம் உள்ளன. 9 செப்ரம்பர் 1705 இல் வாஸ் அடிகள் உடன் பணியாளரருடன் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்.[24] இதில் இலங்கை முழுவதும் எட்டுப்பணித்தளங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு குரு பொறுப்பாக நியமிக்கப் பெற்றார். வாஸ் அடிகள் தாம் கண்டியில் தங்கியிருந்து, ஒவ்வோரு குருவையும் அவர் தம் பணித்தளத்தையும் தரிசித்து குருக்களையும் மக்களையும் ஊக்குவித்து தேவைக்கேற்ப உதவி வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி வாஸ் அடிகள் கண்டி நகரை மையமாகக் கொண்டு அங்கிருந்து நாடு முழுவதும் பத்துக்கும் அதிகமான மறை அறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார்.

யாழ்பாணத்திற்கு இரண்டு தடவைகளும், கொழும்பு நீர்கொழும்பிற்கு மூன்று தடவைகளும், மட்டக்களப்பிற்கு ஆறு தடவைகளும், திருகோணமலைக்கு ஆறு தடவைகளும், புத்தளத்திற்கு எட்டு தடவைகளும், மாதோட்டத்திற்கு நான்கு தடவைகளும் மறைஅறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் அனைத்தும் பாத அணிகள அற்ற நிலையில், கால் நடையாக மேற்கொண்ட பயணங்களாகும். பல பிரச்சினைகளும் சிக்கல்களும் நிறைந்த சூழலில் வாஸ் அடிகள் பல்வேறு பணிகளில் மிகக்கடினமான பணியை தாம் தெரிந்துகொண்டார். சிறந்த மறை அறிவிப்பு முறையாகக் கொள்ளப்படுகின்ற இல்லத்தரிசிப்பு, பங்குத்தரிசிப்பு என்பவற்றின் உச்சப்பயன்பாட்டை இவை சுட்டி நிற்கின்றன. அந்தந்த இடங்களிலுள்ள கிராமங்களைத் தரிசித்தமையும், மக்களை ஊக்கப்படுத்தியமையும், இவை அனைத்தும் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் கண்காணிப்பின் மத்தியில் இடம் பெற்றவை.[25]

மக்களுடன் நெருங்கிப் பழகுவதன்மூலமே மக்களின் பிரச்சினைகளை அறிந்து, விசுவாச வாழ்வில் ஊக்கப்படுத்த முடியும் என்பதை யோசப் வாஸ் நன்கு அறிந்திருந்தார். "நல்ல ஆயன் நானே என் ஆடுகளை எனக்குத் தெரியும், அவையும் என்னை அறியும்" இவை யேசு பெருமானின் வார்த்தைகள். மக்களுடன் நெருங்கிய உறவை எற்படுத்துவதன் மூலமே அவர்களை அறிய முடியும். குருக்களின் பணியில் மக்களைத் தரிசிக்கும்பணி மிக முக்கியமானது. இது பற்றி திருச்சபையின் சட்டக்கோவை 529 பிரிவு I கீழ் வருமாறு குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தி.ச. 529 – 1. தமது மேய்ப்புப் பணியை ஊக்கமுடன் நிறை வேற்றும் பொருட்டுப் பங்குக்குரு அவரது கண்காணிப்பில் ஒப்படைக் கப்பட்டுள்ள விசுவாசிகளை அறிய முயலவேண்டும். ஆகவே அவர் களது குடும்பங்களைச் சந்தித்து அவர்களின் அக்கறைகளையும் கவலைகளையும் மிகவும் குறிப்பாக அவர்களது மனத்துயரங்க ளையும் பகிர்ந்துகொண்டு ஆண்டவரில் அவர்களைத் தேற்றவேண்டும்.....[26]

இவ்வாறே ஆயரும் மக்களைத் தரிசிக்க வேண்டுமென்பதையும் சட்டக்கோவை வலியுறுத்துகின்றது. 396 பிரிவு I

"தி.ச 396 – 1 ஆயர் ஒவ்வோர் ஆண்டும் தமது மறைமாவட்டத்தை, முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியோ பார்வையிடக் கடமைப்பட்டுள்ளார் இவ்வாறு அவர் தாமாகவே அல்லது சட்ட முறை மைப்படி அவர் செயல்பட இயலாத நிலையில் இணை ஆயர், துணை ஆயர், ஆயர் பொதுப்பதில் குரு அல்லது ஆயர் பதில் குரு அல்லது மற்றொரு குரு வழியாகவோ குறைந்த அளவு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளில் மறைமாவட்டம் முழுவதையும் அவர் பார்வை யிட்டிருக்க வேண்டும்."[27]

## தொகையிலும் மேலாக தரத்திற்கு முதலிடம் அளித்தவர்

கடும் எச்சரிக்கைகள், ஆபத்துக்கள் மத்தியில் பணியாற்றிய போதும் தாமாகவே மதம்மாற முன்வந்தோரையும் மிக நிதானத்துடனேயே ஏற்றுக் கொண்டார். மதம்மாற விரும்பியோரின் இலட்சியம் தவறானது எனக்கண்டபோது அவர்களுக்கு திருமுழுக்கு அளிக்க மறுத்தார். 1703 ஆண்டுக்குறிப்பின்படி "கண்டி அரசையும், கடலோரப் பகுதியையும், சார்ந்த எண்பது பேர் இவ்வருடம் கத்தோலிக்க மறையைத் தழுவ முன்வந்தனர். எனினும் யோசப்வாஸ் அடிகள் இவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கத் தயங்கினார். இவர்களின் உண்மை நோக்கினையும் தூண்டுதலுக்கான காரணங்களையும் அறிந்த பின்பே திருமுழுக்களிக்கலாம் என முடிவு செய்தார்."[28]

## போர்த்துக்கேய குழும மதமாற்றம்

ஆரம்பத்தில் கரையோரங்களில் வாழ்ந்த மக்களே கத்தோலிக்க மறையைத் தழுவினர். இவர்களை மதம் மாற்றிய போர்த்துக்கேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்பணியபளர்கள் சாதிக்குழுமங்களை அல்லது முழுக் கிராமத்தையும் மதம் மாற்றினர். இவர்கள் தனி மனிதர்களை அல்லது பரந்து வாழ்ந்த மக்களை மதம் மாற்றுவதை விட குழுமநிலை மதமாற்றத்தில் அதிக கவனம் செலுத்தினர். இக்குழுமங்கள் சாதி அடிப்படையிலோ அல்லது பிரதேச அடிப்படையிலோ அமைந்திருந்தன.[29] குழுமநிலை மதமாற்றம் ஒல்லாந்த இராணுவத்தினரின் கெடுபிடிகள், சித்திரவதை மட்டிலும் எதிர்த்து நிற்பதற்குப் பெரும் துணையாயமைந்தது. மேலும் சில்லாலைக்கிராமத்திலும், இலங்கையின் சில ஏனைய பகுதிகளிலும் விசுவாசம் நிலைத்து நின்றமைக்கும், ஒல்லாந்தக் கலாபனைகளின் போது ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டுவதற்கும், ஆபத்தான சூழலை எதிர்கொள்வதற்கும், கத்தோலிக்க மறையை முற்றாக அழிப்பதற்கு ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினர் மேற்கொண்ட பலவாறான நடவடிக்கைகள் மத்தியிலும் கத்தோலிக்கம் நிலைத்தமைக்கு குழுமநிலை மதமாற்றம் மிகப் பொருத்தமானதோர் ஆக்கபூர்வச் செயற்பாடெனக் கொள்ளலாம்.

## கத்தோலிக்க மத வழிபாடுகளின் சிறப்பு

கத்தோலிக்க மறையைப்பரப்ப போர்த்துக்கேய மிசனறிமாரால் சுதேச மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிபாடுகள், சடங்குகள் பக்தி முயற்சிகள் மக்களின் உள்ளங்களை ஆழமாகத் தொட்டதுடன் மக்களால் ஏற்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இவ்வழிபாடுகளில் இடம்பெற்ற பாடல்கள், செபங்கள், சடங்காசாரங்கள், தூபம் செய்தல், புனிதர் வணக்கம், புனிதப் பொருட்கள், மெழுகுவர்த்தி ஏற்றுதல், நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் நோன்பு திருப்பவனிகள், திருயாத்திரைகள். முதற் கனிகளைக் காணிக்கையாக வழங்குதல், ஆலயத்திருவிழாக்கள். கொடியேற்றம், திருவிழா ஆயத்த வழிபாடுகள் இவ்வாறாக சமுகமயப்படுத்தப்பட்ட சமய விழாக்கள், விருந்துகள், நாடகங்கள் என்பன ஆன்மீக, உளவியல் தேடல்களுக்கு நிறைவுகளாயமைந்தன. இந்துக்களாயிருந்து கத்தோலிக்கத்தைத் தழுவியபோது இழந்த சடங்காசாரங்களை மாற்று வடிவில் கத்தோலிக்க மறையில் கண்டு கொண்டனர்.[30]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

## இலக்கியமும் – மறை அறிவு வழங்கலும்

உலகப்பெருமறைகளின் வரலாற்றை எடுத்து நோக்கிலும் அம்மறையின் கோட்பாடுகளைப் பரப்புவதில் அம்மறைசார் இலக்கியங்கள் மிகக்கணிசமான பங்களிப்பு வகித்துள்ளன. தமிழ்க்கிறிஸ்தவ இலக்கியத்தின் முன்னோடிகள் வரிசையில் கென்றிக்கென்றிக்கஸ், றொபேட் டீ நொபிலி (தத்துவ போதகர், யோசப் கொன்ஸ்ரன் பெஸ்கி (தைரியநாத சுவாமிகள்), என்போர் கணிசமான இலக்கியங்களைப் படைத்து, இலக்கிய வரலாற்றில் தடம் பதித்துள்ளனர்.

வாஸ் அடிகள் மறை அறிவிப்பை வினைத்திறனுடன் அறிவிக்க பல முயற்சிகளை மேற்கொண்டார். போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஆக்கப்பட்ட தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களில் அர்ச் யாகப்பர் அம்மானை, ஞானப்பள்ளு என்னும் இலக்கியங்கள் மட்டுமே அழிவினின்று காக்கப்பட்டுள்ளன. ஏனையவை எவையும் கிடைத்தில. இந்நிலையில் தமிழ், சிங்கள மொழிகளில் இலக்கியங்களை ஆக்கும் பெரும் பொறுப்பை ஏற்று செயற்படுத்தும் திறன் உள்ளவராக யாக்கோமே கொன்சால்வெஸ் (1627 - 1742) அடிகள் கண்டிக்கு அழைத்து செல்லப்பட்டுச் சிங்கள மொழியையும் கற்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

கொன்சால்வெஸ் அடிகள் இரண்டு மொழிகளையும் கற்று சிங்களமொழியில் 22 நூல்களையும் தமிழில் 15 நூல்களையும் எழுதினார். இந்நூல்கள் அடிப்படைச் செபங்கள், ஒழுங்குவிதிகள், விவிலிய மொழிபெயர்ப்பு, விவிலிய வினாவிடை, திருவருட்சாதனங்கள், கோட்பாடுகளுக்கான விளக்கம், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் பற்றிய விளக்கம், புனிதர்கள் வரலாறு, மரியன்னையின் புதுமைகள் என பல விடயங்களை உள்ளடக்கியவையாகக் காணப்பட்டன. மேலும், கொன்சால்வெஸ் அடிகள் கம்மல என்னுமிடத்தில் 12 இற்கும் அதிகமான படியெடுப்போர்[31] துணைகொண்டு ஒவ்வொரு நூலிலும் 200 - 300 பிரதிகள் படி எடுக்கப்பட்டதாக[32] வரலாறு கூறுகின்றது.

இவற்றுள் 1730 இல் ஆக்கப்பட்ட வியாகுலப்பிரசங்கம் என்னும் நூல் இன்றுவரை மக்கள் மத்தியில் அதிகம் வரவேற்புப் பெற்று வருகின்றது. சிங்களம், தமிழ் மொழிகளில் இவர் ஆக்கிய இலக்கியங்களில் 10 நூல்கள் இரண்டு மொழிகளிலும் ஒரேவிடயப் பொருளைக் கொண்டுள்ளன என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்கள் மறை ஆசிரியர்கள் அதாவது அண்ணாவி, உபதேசி என்போருக்குப் பெரும் பயனுள்ள நூல்களாக விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மேலும், வளர்ந்தோருக்கான மறை அறிவை கணிப்பதற்கும் சிறந்த கற்பித்தல் ஊடகமாக விளங்கியிருக்கும். மேலும், மக்களுக்கு மறை பற்றிய ஆழமான, பரந்த அறிவை அளிப்பது முக்கியமானது என்பதையும் இலக்கியங்கள் மறை அறிவிப்பின் பெரும் பங்காற்றமுடியும் என்னும் கருத்தினையும் இலக்கியங்களின் ஆக்கம் எடுத்துரைக்கின்றது. யோசப்வாஸ், கொன்சால்வெஸ் அடிகளுக்கு கிடைக்காத அச்சியந்திர யுகத்தில் நாம் உள்ளதும் கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

## மதமாற்றமும் – பொருளுதவியும்

யோசப்வாஸ் அடிகள் பிறசமயத்தவர் கிறிஸ்து மறைக்கு மதம்மாறுவதை ஏற்றுக்கொண்ட போதும், எந்தவித சலுகைகளோ கொடைகளோ வழங்கி மதம்மாற்றம் செய்யவில்லை. அவர் மேற்கொண்ட மதமாற்றச் செயற்பாடுகளுக்குச் சாதகமாய் அமைந்தது அவரது எடுத்துகக் காட்டான வாழ்வும், அவர் மதபேதமின்றி கடைப்பிடித்த மனிதநேயச் செயல்களும், கண்டியில் அம்மை நோய் பரவி பல உயிர்களைக் காவு கொண்டபோது உதவியின்றி தவிக்கவிட்டுச் சென்ற பலநோயாளரைப் பராமரித்ததும், அவர் நோய்த் தொற்றிலிருந்து காக்கப்பட்டதும் பெரும் புதுமையாகவே கிறிஸ்தவர்க்கும், கிறிஸ்த வரல்லாதோர்க்கும் தென்பட்டது. வாஸ் அடிகளின் புனித வாழ்வும், மனிதநேயப்பணிகளுமே பலரின் மதமாற்றத்திற்கும் காரணங்களாய மைந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பிற மதங்கள் மட்டில் கொண்டுள்ள பரந்த நல்லெண்ண மனப்பாங்கை வாஸ் அடிகள் முன்பே தம் நடத்தையினால் வெளிப்படுத்தியுள்ளார்.

## சில்லாலையில் ஆபத்து – எனினும் அது ஒரு ஆசீரே

1687 யூலை முதல் சில்லாலையில் தங்கியிருந்து பல ஆபத்துக்கள மத்தியிலும் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் 1689 இல் கிறிஸ்து பிறப்பு விழாத்தினத்தன்று கைதுசெய்யப்படும் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வாஸ் அடிகள் அவசர, அவசரமாக சில்லாலையிலிருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திருச்சபைக்கு இது ஒரு பின்னடைவானபோதும், இந்நிகழ்ச்சி இலங்கைத்திருச்சபையின் பெருவளர்ச்சிக்கு வழிகோலியது. மேலும் யாழ்ப்பாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து வெளியேறிய வாஸ் அடிகள் புத்தளம் சென்று அங்கிருந்து கண்டி செல்வதற்கும் பாதுகாப்பான கண்டியரசிலிருந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு சென்று மறை பரப்புப்பணியை மேற்கொள்ளவும் சில்லாலையிலிருந்து வெளியேறிய நிகழ்வு வழிகோலியது.

## கண்டியில்சிறை – இலங்கைத்திருச்சபைக்கு மற்றுமோர் ஆசீர்

1692இல் வாஸ் அடிகள் கண்டிக்குச் சென்றார். எனினும் கண்டிக்குச் செல்வதற்கு முன்பு கோவாவிலுள்ள தமது சபைத்தலைவருக்குக் கடிதம் அனுப்பி, தாம் தொடர்ந்து இலங்கையில் பணியாற்றுவதா? அல்லது கோவாவிற்குத் திரும்ப வேண்டுமா? இலங்கையில் பணியாற்ற வேறொருவரை நியமிக்கும் திட்டமுண்டா? எனக் கேட்டிருந்தார்.[33] ஆச்சரியமாக, சபைத்தலைவர் வாஸ் அடிகளைக் கோவா திரும்பும்படி பதில் எழுதியிருந்தார். இக்கடிதம் வாஸ் அடிகளை மிகவும் இக்கட்டான நிலைக்குத்தள்ளியது. சபைத்தலைவரின் பணிப்பை இறைவனின் சித்தம் எனக்கருதி வாஸ் அடிகள் கோவா செல்ல விரும்பினாலும் சிறைப்பட்டிருந்த காரணத்தினால் செல்ல முடியவில்லை. எனினும் சபைத்தலைவருக்கு 27 ஒக்டோபர் 1693 இல் பதில் எழுதினார். அதில் "நான் இங்கு சிறைப்படுத்தப்பட்டுள்ளேன். நான் சிறையிலிருந்து தப்பித்து கோவா திரும்பினால் இச்சூழலில் இங்குள்ள கத்தோலிக்கரின் நிலை என்னவாகும்" எனக் கேட்டிருந்தார்.[34] கண்டி மன்னன் விமலதர்மசூரிய II வாஸ் அடிகளைச் சிறைப்படுத்தியது இலங்கைத் திருச்சபைக்கு கிடைத்த மறைமுகமான ஆசீரே. சிறைப்படுத்தப்படாதவிடத்து சபைமுதல்வர் பணிப்பை ஏற்று சென்றிருப்பார். வாஸ் அடிகள் கோவா சென்றிருந்தால் இலங்கைத் திருச்சபையின் நிலை பெரும் பின்னடைவை எதிர்நோக்கியிருக்கும் எனக்கொள்வது சரியான கணிப்பாயமையும்.[35]

## பொது நிலையினர் பங்களிப்பு

வாஸ் அடிகள் 1687 முதல் தனியொருவராகவே இலங்கையில் பணியாற்றினார்.[36] வாஸ் அடிகள் சிக்கலான சூழ்நிலையில் வெற்றிகரமாகப்பணியாற்றியமைக்கு பொதுநிலையினர் வழங்கிய ஒத்துழைப்பு முக்கிய காரணிகளிலொன்றாயமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்குவதில் மூப்பு, அண்ணாவி ஆகியோர் பங்களிப்பு

வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்ரோறியன் சபைக்குருமாரும் மிக குறைந்த எண்ணிக்கையினராயிருந்தபோதும் சிறந்த முறையில் கிறிஸ்தவ சமுகங்களை உருவாக்கியுள்ளனர். மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூப்பு, அண்ணாவி (உபதேசியார்) என்போரின் உதவியுடன் இக்கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக்கப்பட்டன. சமூக அந்தஸ்து பெற்றவர்களையும் மறையில் ஆழமான பற்றுள்ளவர்களையுமே இப்பணிக்கு நியமனம் செய்தனர்.[37]

மூப்பர் என்பவர் சமுகத்தின் தலைவராகவும், வழிநடத்துனராகவும், பிணக்குகளின்போது நடுநிலையாளராகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) என்பவர் வழிபாடுகளின்போது குறிப்பாக ஞாயிறு தினங்களில் நோயாளருக்காகச் செபித்தல், இறந்தோரின் அடக்கச்சடங்கை நடத்துதல், மறைக்கல்விப்பாடங்களைக் கற்பித்தல், ஆலயங்கள் (கொட்டில் ஆலயங்கள்) உள்ள இடங்களில் அவற்றின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார்.

யோசப் வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்ரோறியன் குருமாரின் பணிகளும் தங்கள் பணிகளை திட்டமிட்டுச் செயற்படுத்தவும் படிப்படியாக கிறிஸ்தவ சமுகங்களை உருவாக்கவும் மூப்பர் அண்ணாவி என்பவர்களின் பணிகள் பெரும் உதவியாயமைந்தன.[38] மக்களும் இவர்களைத் தம் தலைவர்களாக ஏற்று ஒத்துழைப்பு வழங்கி, மதிப்பளித்தனர். இவர்கள் குருக்களாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்கள் என்பது முக்கிய விடயமாகும்.[39]

இந்த நடைமுறை போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே வழக்கிலிரு ந்துள்ளது. வாஸ் அடிகள் சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூப்பரின் கண்காணிப்பில் விடப்பட்டமை இதனை எடுத்துக்காட்டுகின்றது.[40]

. மேலும் வாஸ் அடிகள் சில்லாலையில் தங்கிப் பணியாற்றுவது அவரது பாதுகாப்பு, அண்டைய கிராமங்களுக்கு அவரது பணியை ஒழுங்கு செய்வது, தேவைகளைக் கவனிப்பது ஆகிய பொறுப்புக்கள் மூப்பரிடம் ஒப்படைக்கப்பட்டன. வாஸ் அடிகளும் மூப்பருக்குப்பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராக நடந்துள்ளார். சில்லாலையைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதே முறைமை நடைமுறையில் இருந்துள்ளது.

குருக்கள் பொதுநிலையினருடன் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவமும், பொதுநிலையினரும் ஆக்கபூர்வமான முறையில் பொறுப்புக்களை ஏற்பதுடன் குருக்களின் பணிகளில் பங்கு கொள்ளவேண்டியதன் தேவையையும் எடுத்துக்காட்டுகின்றது.

## மக்கள் புகலிடம் அளித்தல்

வாஸ் அடிகளும், ஏனைய குருக்களும் மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டபோது ஆபத்துக்கள் மத்தியிலும் அந்தந்த இடங்களில் வாழ்ந்த மக்களோ தங்கள் குடிசைகளில் இவர்களை ஏற்று, புகலிடம் வழங்கி, கண்காணித்துள்ளனர்.

## ஜோண் வழங்கிய ஆறுதல்பணி

பயணத்துணைவராக மட்டுமன்றி இறுதிவரையும் வாஸ் அடிகளுக்கு உதவி, கடும் நோயுற்ற வேளையில் உடனிருந்து பராமரித்தவர் பிரமாணிக்கமுள்ள ஊழியன் யோண் என்பவராகும். இவர் வழங்கிய உதவி காலத்தால் என்றும் மறக்கப்பட முடியாதது. இவருக்கும் வாஸ் அடிகளுக்குமிடையே நிலவிய உறவை எஸ். ஜி பெரேரா அடிகள் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார். " அவரது பிரமாணிக்கமான பணியாளன் யோணை அவர் தனது சொந்தச்சகோதரன் போல நடத்தி வந்தார். கோவாவிற்கு எழுதும் மடல்களில் எல்லாம் அவனைப்பற்றி விசாரித்து எழுதுவார். தனது சகோதரன் யோண் வாஸ் என்றே அவனை அழைப்பார். ஏனென்றால் அவர் அவனுக்குத் தனது குடும்பப் பெயரையே அளித்திருந்தார்."[41]

இவ்வாறாக பொது நிலையினரின் பங்களிப்பு வாஸ் அடிகளின் பணி சிறக்க உதவியுள்ளது.

## பணிக்கு களங்கம் – பதவி ஏற்க மறுப்பு

வாஸ் அடிகளின் இலங்கைக்கான வருகையின் 200 வது வருட நிறைவை முன்னிட்டு இலங்கை அரசினால் முத்திரை வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முத்திரையில் இடம்பெற்ற ஓவியத்தில் வாஸ் அடிகளின் அருகே ஆயருக்குரிய செங்கோலும், ஆயர்கள் அணியும் முடியும் காணப்படுகின்றன. இது சுட்டும் பொருள் என்ன?

1703 நவம்பர் பாண்டிச்சேரியை அடைந்த ஆயர் தெரூணோ வாஸ் அடிகளிடமிருந்து, அவரதும், ஓரற்றோறியன் சபையினதும் பணிகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியதுடன், வாஸ் அடிகளை இலங்கைக்கு ஆயராக நியமனம் செய்வதற்கும், அவர் விரும்பாத நிலையில் அவரால் முன்மொழியப்படும் வேறொரு குருவை நியமனம் செய்வதெனவும், இது பற்றி வாஸ் அடிகளின் கருத்தை தெரிவிக்கும் படியும் கோரியிருந்தார். பேராயரின் மடலுக்கான பதிலை வாஸ் அடிகள் 26 யூலை 1706 இல் அனுப்பியிருந்தார். இதில் இலங்கை மிசன் பற்றிய தகவல்களை வழங்கியபோதும் ஆயர் நியமனம் பற்றிய விடயம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவ்வாறு இது பற்றிய கருத்துத் தெரிவிக்காமைக்கு வலுவான கார்ணங்களுண்டு.

1) தாழ்ச்சியை அதிகம் விரும்பிய வாஸ் அடிகள் ஆயர் பதவியுடன் இணைந்த புகழையோ, கௌரவத்தையோ விரும்பவில்லை.

2) வாஸ் அடிகள் ஏன் வேறொரு குருவின் பெயரை முன்மொழியவில்லை. இதனால் இலங்கையில் பத்துருவாதோ - விசுவாசப்பரம்புதல் சபை முரண்பாடுகள் தோன்றி இலங்கைத் திருச்சபைக்குப் பெரும் பின்னடைவை ஏற்பட்டிருக்கும் என மதி நுட்பத்துடனும் முன்நோக்குடனும் சிந்தித்து கருத்துக்கூறுவதை தவிர்த்திருந்தார். 1681 - 84 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றியபோது இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்தார். இதனை, பத்துருவாதோ – விசுவாசப்பரம்புதல் சபை முரண்பாடுகளின் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளலாம்.

## பத்துருவாதோ – விசுவாசப்பரம்புதல் சபை முரண்பாடுகள்

1637 இல் விசுவாசப் பரம்புதல் சபை மத்தியு தெ கஸ்ரோ (Matthew de Castro) என்னும் கோவா அருட்பணியாளர் ஒருவரை வியப்பூர் (Bijapur) என்னும் இடத்தில் அப்போஸ்தலிக்க ஆளுநராக நியமித்தது கோவாவிலுள்ள திருச்சபையின் அதிகாரிகள் பத்துருவாதோ பக்கம் சார்புடையவர் என்பதனால் இரு பகுதியினரிடையேயும் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது.[42]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1674 இல் விசுவாசப்பரம்புதல் சபை கோவாவைச் சேர்ந்த தோமஸ் டொ கஸ்ரோ அடிகளை தென் கன்னடத்தின் திருத்தூது ஆளுநராக நியமித்தது. வாஸ் அடிகள் இப்பகுதியில் 1681 முதல் 1684 வரையும் (Vicar Forane) மறை மாவட்ட முதல்வராகப் பணியாற்றினார்.[43] இக்காலத்தில் இப்பகுதியின் மேய்ப்புப் பணிசார் நிர்வாக அதிகாரம் பத்துருவாதோ - விசுவாசப்பரம்புதல்சபை எது சார்பானது என்னும் இழுபறி நிலையில் யோசப் வாஸ் அடிகள் பணியாற்ற வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறான சிக்கல் நிலையில் மிகவும் சாதுரியத்துடனும், விவேகத்துடனும் மக்கள் பணியே தமது முதன்மையான இலட்சியம் எனப் பணியாற்றினார்.

கன்னடத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றியமையினால் பத்துருவாதோ - விசுவாசப்பரம்புதல் சபை முறுகல் நிலையும், முரண்பாடுகளும் நிலவும் நிலையிலுள்ள பகுதியில் பணியாற்றும்போது எதிர்நோக்க வேண்டிய சிக்கல்களை நன்கு அறிந்திருந்தமையினால் பத்துருவாதோ நிர்வாகப்பகுதியாயுள்ள இலங்கை மிசனில் விசுவாசப் பரம்புதல்சபை வழங்கும் ஆயர் நியமனம் நிலமையை மிகவும் கடுமையாகப் பாதிக்கும் என்பதை உள்ளூர ஆழமாக உணர்ந்திருந்தார். இப்பின்னணியில் இலங்கைக்கு ஒரு ஆயரின் நியமனம் பத்துருவாதோ ஆதரவாயிருந்த கொச்சின், கோவா என்னும் இடங்களில் பெரும் வெறுப்பைச் சம்பாதிப்பதிப்பதுடன் இலங்கையில் பணியாற்றுவதற்காக ஒறற்ரோறியன் குருமாரின் வருகையும் முற்றாக நிறுத்தப்படுவதற்கான ஆபத்து எதிர்நோக்க வேண்டியதே. இந்நிலையில் கோவா ஒறற்ரோறியன் குருமார் இலங்கைக்கு வருவது முற்றாக நிறுத்தப்படுமாயின் இது இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்குப் பெரும் பேராபத்தாக அமைந் திருக்கும்.

இலங்கைக் கத்தோலிக்கருக்கு எந்தக்குருமாரின் உதவியும் கிடைக்காத நிலையிலேயே வாஸ் அடிகள் இலங்கைக்கு வந்தார். இலங்கையில் ஆயரில்லாத நிலையிலும் மக்களின் தேவை அதிகப்படியாக நிறைவேற்றப்பட்டது. குருமுதல்வர் என்னும் நிலையில் வேண்டிய அதிகாரங்களைக் கொண்டிருந்தார் ஆயர் நியமனம் இடம் பெற்றிருக்குமாயின் நன்மையிலும் மேலாகத் தீமையாகவே அமைந் திருக்கும் பேராயர் தெ ரூணோ மூலம் இடம்பெறவிருந்த நியமனத்தை யோசப்வாஸ் அடிகள் ஏற்காமைக்கு அவரிடம் விளங்கிய தாழ்ச்சியும், சாதுரியமான விவேகமுமே காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள, பௌத்த மன்னர்களின் ஆதரவு

சிங்கள, பௌத்த மன்னர்களான விமலதர்மசூரிய II (1687 - 1706), ஸ்ரீ நரேந்திரசிங்க (1739 -1747) ஆகிய இருவரும் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு, உதவிகள், 1692 - 1746 வரையிலுமான காலப்பகுதியில் கண்டி அரசு வழங்கிய புகலிடம் வாஸ் அடிகளுக்கும், ஏனைய ஒரற்றோறியன் குழுமக் குருமாருக்கும் பெரும் உதவியாயமைந்தது. 1697 - 98 காலப்பகுதியில் அம்மை நோய் வேகமாகப்பரவி பல உயிர்களையும் காவு கொண்ட வேளையில் யோசப் வாஸ் அடிகளும், அவரது மருமகன் கர்வாலோ அடிகளும் ஆபத்தான வியாதி என்பதை அறியும் நோயாளருக்கு உதவியமை மன்னனுக்கும் மக்களுக்கும் குருக்களின் பிறர் அன்புச் சேவை மனித அறிவினால் புரிந்து கொள்ள முடியாத தியாகமாயமைந்தது. கண்டியில் கடும் வரட்சியின் போது இடம் பெற்ற ஆச்சரியமான மழை பற்றியும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

## வாஸ் அடிகளின் புனித வாழ்வு

இறைவனுடனும், மனிதனுடனும் கொண்டுள்ள சீரான உறவின் செயற்பாடுகளிலேயே புனித வாழ்வு தங்கியுள்ளது. வாஸ் அடிகளின் வாழ்வு முழுவதும் அயலவர் நலன் பேணுவதிலும், இறைவனின் திட்டத்தைச்செயற்படுத்துவதிலும் அடங்கியிருந்தது. இலங்கையில் பரிதாப நிலையில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களுக்கு பல ஆபத்துக்கள் மத்தியிலும் பணியாற்ற எடுத்துக்கொண்ட முடிவும், மக்கள் குடிசைகளை நாடிச் சென்று ஆறுதலளித்து ஊக்கப்படுத்தியமையும், கண்டியில் அன்றாடம் மக்கள் பசி தீர்க்க அரிசி வழங்கியமையும், கண்டியில் அம்மைநோயின்போது அவரது மருமகன் கர்வாலோ அடிகளும், அவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதும் இவரது மக்கள் சேவையை எடுத்தியம்பும் சில எடுத்துக்காட்டுக்கள். மேலும், கண்டியில் அதிசய முறையில் பொழிந்த மழையும், மக்களும் மன்னனும் இவர் மட்டில் உயர்மதிப்பீட்டை ஏற்படுத்தக்காரணங்களாயமைந்தன.

இவரது ஆழமான ஆன்மீகம் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டன. திருவருட்சாதனங்களை பக்தியுடன் நிறைவேற்றுவதில், திருச்சபையில் கொண்டுள்ள பற்று, ஆன்மாக்களின் மீட்பில் காட்டிய ஆழமான ஆர்வம், அன்னை மரியாவின் மட்டில் ஆழமான பக்தி, வாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகள் மேற்கொண்ட கடும்தவ வாழ்வு (asceticisn) அவரது துறவு வாழ்வின் சாதனைகளுக்கு காரணமாயமைந்தது. இவரிடம் விளங்கிய தவப்போக்கு இந்திய ஆன்மீகப் பாரம்பரியத்தையும், எகிப்திய, லெபனான், சீரிய வனாந்தரங்களில் ஆரம்பித்து வளர்ச்சி கண்ட கிறிஸ்தவ வாழ்வுப் பாரம்பரியத்தையும் உள்ளடக்கியதாக விளங்கியது.

வாஸ் அடிகளின் புனித வாழ்விற்கு பலர் சான்று பகர்ந்துள்ளனர். விமலதர்மசூரிய II, நரேந்திரசிம்ம[44] என்னும் கண்டி பௌத்த மன்னர்கள், ஒரற்ரோறியன் சபையின் சக பணியாளர்கள்,[45] கல்வின் மத அதிகாரி பேரற்றோ கஸ்கோன், திருத்தந்தையின் உயர் நிலைத்தூதுவர் சாள்ஸ் தெ ருணோ, இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள்[46] எனப்பல துறையினரும் சான்று பகர்ந்துள்ளனர். மக்கள் சிலர் இவரை சம்மனசு சுவாமி எனவும் அழைத்தனர். 26 ஆகஸ்ற் 1704 இல் உரோமைக்கு அனுப்பிய அறிக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு வந்த கத்தோலிக்கரிடமிருந்து தாம் பல ஆச்சரியமான விடயங்களை அறிந்ததாக கூறியுள்ளார்.

## இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை

இலங்கைத் திருச்சபை வழிநடத்தும் பொறுப்பை வாஸ் அடிகள் மேற்கொண்ட போது முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது தம்முடனுள்ள குருவிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பதுண்டு. குருக்கள் இல்லாதவிடத்து பொறுப்புள்ள பொதுநிலையினருடன் கலந்தாலோசித்தார் என்பது அவருடன் வாழ்ந்த குருக்களின் சான்றாகும். இலங்கைக்கான பயணத்தைப்பற்றித் தீர்மானிக்கு முன்பு தம் ஆன்ம குருவிடமும், பயணவழியில் தூத்துக்குடியில் இயேசு சபைக் குருக்களிடமும், சில்லாலையில் மூப்பரின் வழிகாட்டலையும் பெற்றமை குறிப்பில் இடம் பெறுதல் பொருத்தமானது.[47]

## வாஸ் அடிகளும் தலைமைத்துவமும்

### தலைமைத்துவ வகைகள்.

| | |
|---|---|
| ஏகாதிபத்திய தலைமைத்துவம் | (Autocratic Leadership) |
| மக்களாட்சித் தலைமைத்துவம் | (Democratic Leadership) |
| பங்கேற்புத் தலைமைத்துவம் | (Participatary Leadership) |
| இசைவுத் தலைமைத்துவம் | (Permissive Leadership) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய தலைமைத்துவத்தில் தலைவரின் அதிகாரப்போக்கும், ஆக்கிரமிப்புப்போக்கும் அதிகம் காணப்படும். "நான் கூறுவதை மறுபேச்சின்றி செயற்படுத்து" என்னும் போக்கே மேலோங்கி நிற்கும். இத்தலைமைத்துவத்தில் தமக்குக் கீழுள்ளோரின் கருத்தைக் கேட்பது மில்லை, செவிமடுப்பதுமில்லை. முதிர்ச்சியடையாத பொறுப்பற்ற பணியாளர் மத்தியில் இம்முறை பயனளிக்கலாம். மக்களாட்சித் தலைமைத் துவத்தில் தலைவர் தமக்குக் கீழுள்ளோர் கருத்திற்கு மதிப்பளித்து, தீர்மானம் எடுப்பதில் மற்றயோரின் பங்களிப்பும் இடம் பெறும். இங்கு செயற்பாட்டில் வினைத்திறனும், மக்கள் நலனும் கருத்திற் கொள்ளப்படும்.

பங்கேற்புத் தலைமைத்துவம் மேற்குறிப்பிட்ட இரண்டு வகைத் தலைமைத்துவத்திலும் சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள் ளது. இதில் மக்களாட்சித் தலைமைத்துவத்தின் பண்புகளே அதிகம் காணப்படும். தலைவர்கள் செயற்திட்டங்கள் பற்றிய தமது கருத்துக்க ளையும், முன்மொழிவுகளையும் தம் கீழுள்ள பணியாளர்களிடம் முன்வைக்க இரு பகுதியினரும் இணைந்து முடிவுகளை மேற்கொள்வர். தீர்மானம் எடுப்பதில் இரு பகுதியினரும் இணைவதால், திட்டங்களைச் செயற்படுத்துவதிலும் அனைவரும் பங்கு கொள்வர் என எண்ண இடமுண்டு.

இசைவுத் தலைமைத்துவத்தில் தலைவர்களின் தன் நம்பிக்கை குறைவு அல்லது தாம் எடுக்கும் தீர்மானத்தில் தவறு ஏற்படக்கூடும் என்னும் பயம் காரணமாக தீர்மானங்களை மேற்கொண்டு, நடைமுறைப்படுத்தும் பொறுப்பு குழுவினரிடமே கையளிக்கப்படும். முறையான மேற்பார்வையோ, வழிநடத்தலோ இடம் பெறாமையினால் வினைத்திறன் குறைவாகக் காணப்படலாம். இசைவுத் தலைமைத் துவத்தின் மற்றோர் நிலையை நோக்கும் போது தலைவரின் கீழுள்ள குழுவினர் முதிர்ச்சி பெற்றவராகவும், செயலார்வத்தில் உயர் தூண்டுத லுள்ளவர்களாகவும் (highly motivated) விளங்கும் போது இசைவுத் தலைமைத்துவம் உயர் வினைத்திறனை விளைவிக்கும். வாஸ் அடிக ளுடன் பணியாற்றிய அனைத்து ஒரற்றோறியன் சபைக் குழுக்களும் முதிர்ச்சி பெற்றவர்களாகவும், செயலார்வத்தில் உயர்தூண்டுதலுள்ள வர்களாகவும் விளங்கினர்[48]

இப்பின்புலத்தில் யோசப் வாஸ் அடிகளிடம் விளங்கிய தலைமை த்துவ வகையை நோக்கும் போது மக்களாட்சித் தலைமைத் துவமும், பங்கேற்புத் தலைமைத்துவமும், இசைவுத் தலைமைத்துவமும் ஒருசேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடம் விளங்கியுள்ளன. மேலும் குறிப்பாக சிக்கல்கால தலைமைத்துவம் (crisis leadership) இவரிடம் காணப்பட்ட ஒரு தனித்துவமான தலைமைத்துவமாகும்.

## நெருக்கடிவேளைத் தலைமைத்துவம்

யோசப்வாஸ் அடிகளிடம் விளங்கிய தலைமைத்துவப் பண்புகள் அவரது வாழ்வின் செயற்பாடுகள் வழியே பரிணமித்து அவரைச் சிறந்த ஆன்மீகத் தலைவராக வெளிக்காட்டி நிற்கின்றன. கருத்து நிலையில் ஒரு தலைவரிடம் விளங்க வேண்டிய பண்புகளாகக் கொள்ளப்படும் துணிவு, மதிநுட்பம், திட்டமிடல் மறைப்பணியில் ஆர்வம், புத்தாக்கம், தன்நம்பிக்கை, நம்பகத்தன்மை, ஊக்கமளித்தல், கூட்டுச்செயற்பாடு, சமூக இசைவாக்கம் என்பன வாஸ் அடிகளிடம் விளங்கின. யோசப் வாஸ் அடிகள் ஒரு ஆன்மீகத்தலைவர் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதுடன், அவரது தலைமைத்துவத்தின் சிறப்பு அவரது வாழ்வில் பிரதிபலிக்கும் ஆன்மீக மதிப்பீடுகளில் தங்கியுள்ளது. வாஸ் அடிகள் வழங்கிய புனிதமான வாழ்வே அவர் சிறந்த ஆன்மீகத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படக் காரணமாகும்.

நெருக்கடி நிறைந்த சூழலில் பணியாற்ற பொதுவாக முன்வருவோர் குறைவு எனினும் வாஸ் அடிகள் இலங்கைத் திருச்சபை நெருக்கடியில் உச்சநிலையில் இருந்தபோது எவரது வற்புறுத்தலோ, தூண்டுதலோ இன்றித் தாமாக உதவ முன்வந்தார். நெருக்கடிநிலைகள் சிறந்த தலைவரின் தலைமைத்துவப் பண்புகள் வெளிக்காட்டப்பட தகுந்த சந்தர்ப்பங்களாகும். நெருக்கடிச்சூழலில் வாஸ் அடிகள் மக்களையும், சக பணியாளர்களையும் ஊக்குவித்து, உடன் இருந்து வழிநடத்தியதோடு, உடனுக்குடன் தீர்மானங்களை மேற்கொண்டு செயற்பட வேண்டிய நிலையில் பணியாற்றியவர். பணியின் போது கடினமான பகுதியைத் தாமே பொறுப்பேற்று செயற்படுத்தியவர். மனத்துணிவு, சாதுரியம், திட்டமிடல், முன் எச்சரிக்கை, மதிநுட்பம், பகைமையைத் தவிர்த்தல், ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பண்புகளை உள்வாங்கிப் பணியாற்றியவர்.[49]

இலங்கையில் யோசப் வாஸ் அடிகள் பல மட்டுப்பாடுகள் மத்தியில் பணியாற்றியபோதும், அவரது பணி பெரிதும் வெற்றி பெற்றமைக்கு அவரிடம் விளங்கிய தலைமைத்துவப் பண்பு முக்கிய காரணிகளில் ஒன்றாகும். உலகத்திருச்சபை வரலாறோ, மறைமாவட்டங்களின் அல்லது துறவற சபைகளின் வரலாறோ தெளிவாக ஒரு உண்மையைச் சுட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றன. ஆளுமைப் பலமுள்ள தலைவர்களின் நிர்வாகத்தில் மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்பட்ட வேளை பலவீனமான தலைமைத்துவத்தின் போது திருச்சபை தளர்ச்சியும், வீழ்ச்சியும் கண்டுள்ளது. திருச்சபை ஒரு நிறுவனம். எந்த நிறுவனத்தின் வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும் அதனைத் தலைமை தாங்கி முன்னெடுப்பவரின் ஆளுமை கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஆயர்கள், குருக்கள், துறவிகள் மக்களை வழிநடத்தும் பணிக்குத் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களாகும். சமூகமும் இவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறது. தலைவர்களின் பல்வேறு நிலைகளை நோக்கும் போது சிலர் பிறப்பிலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டோராகவும் மற்றும் சிலர் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களாகவும், வேறு சிலர் நியமனம் பெற்ற தலைவர்களாகவும் காணப்படுகின்றனர். திருச்சபையின் தலைவர்கள் நியமனம் பெற்றவர்களாகும்.

பல இறுக்கமான கட்டுப்பாடுகள், நெருக்குவாரங்கள் மத்தியில் மாறுவேடத்தில் இலங்கைக்குள் நுழைந்து, சிறந்த பணியாற்றிய வாஸ் அடிகள் நியமனம் பெற்ற தலைவருமல்ல தெரிவு செய்யப்பட்ட தலைவருமல்ல மாறாக இயல்பிலேயே தம்மில் தலைமைப்பண்புகளைக் கொண்டவர்.

இலங்கையில் நிலவிய சிக்கலான சூழ்நிலை பற்றியும், இலங்கைக் கத்தோலிக்கர் பரிதாப நிலை பற்றியும் பலர் அறிந்தபோதும் எவரும் ஆபத்தான முடிவெடுத்து இலங்கைக் கத்தோலிக்கருக்கு உதவ முன்வரவில்லை. இந்நிலையிலேயே வாஸ் அடிகள் இப்பாரிய பொறுப்பை ஏற்றுச் செயற்படுத்தினார். "தன் மந்தைக்காகத் தன் உயிரைக கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை" என்னும் கிறிஸ்து பெருமானின் வார்த்தைக்குப் பொருள் வழங்க முன்வந்தார். இதனால் வாஸ் அடிகளை ஒரு தனித்துவமான தலைவர் எனக் கொள்வதே பொருத்தமானது.

## நிறைவுரை

ஏழைகள், பாவிகள், பிணியாளர் மட்டில் அதிக அக்கறை காட்டுவதும், அவர்களைத் தேடிச்செல்வதும், அவர்கள் சார்பாகச் செயற்படுவதெனவும் இயேசு எடுத்த தீர்மானம், அவரது வாழ்வில் அவர் எடுத்த இரண்டாவது முக்கிய தீர்மானம் என்பது கிறிஸ்துவியலாளரது கருத்து[50]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே வாஸ் அடிகள் இலங்கை சென்று அங்கு ஒடுக்கப்பட்டவர்களாகப் பரிதாப நிலையிலுள்ள கத்தோலிக்கருக்கு உதவுவதென மேற்கொண்ட தீர்மானம் அவரது வாழ்வின் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. இத்தீர்மானத்திற்குச் செயல் வடிவமளிக்க வாஸ் அடிகள் தூய வாழ்வு வாழ்ந்தார் என்பதற்கு பல மட்டங்களிலிருந்து சான்றுகள் முன்வைக்கப்பட்டன.

அவரது வாழ்வு, சாதனைகள் நிறைந்த வாழ்வாக அமைந்தமைக்கு அவரது புனித வாழ்வே முக்கிய காரணியாகும். ஏழையாக வாழ்ந்த கிறிஸ்துவைப் போன்று தாமும் ஏழையாகவும், ஏழைகளுடனும், ஏழைகளுக்காகவும் வாழ்ந்தார். அவரது வாழ்வு முழுவதும் இதனை எடுத்தியம்புகின்றது. திருச்சபையின் புனித பணியும் ஏழைகளுடனும், ஒடுக்கப்பட்டோருடன் தம்மை ஒன்று படுத்துவதன் வழி வெளிப்படுகின்றது. இறைவன் ஏழையாக கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார், அதே ஏழை இயேசுவே திருச்சபையை நிறுவினார். வாஸ் அடிகள் ஏழைகளிலே கிறிஸ்துவைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்:**

[1]காண்க, Edmund Peries, *Studies – Historical and Cultural*, Colombo. Catholic Press 1978, p. 99.

[2]காண்க, V. Perniola, *The Catholic Church in Sri Lanka*, The Portuguese Period, vol, 1505 – 1565, 1989 p. xiv. இயேசு சபையைச்சேர்ந்த வி. பேணியோலா அடிகள் இலங்கைத் திருச்சபை தொடர்பான பல ஆவணங்களை உலகிலுள்ள பல ஆவணக்காப்பு கங்களிலிருந்து பெற்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டதன் மூலம் இலங்கைத் திருச்சபை பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பெரும் சேவையை வழங்கியுள்ளார். இவர் இதுவரை போர்த்துக்கேயர் காலம் பற்றிய மூன்று தொகுதிகளையும், ஒல்லாந்தர் காலம் பற்றிய மூன்று தொகுதி களையும், ஆங்கிலேயர் காலம் பற்றிய பன்னிரு தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். எமது ஆய்விற்கு இவரது வெளியீடுகளைப் பயன்படுத்தியுள்ளோம். இவ்வெளியீடு களிலிருந்து மேற்கோள்காட்டும்போது போர்த்துக்கேயர் காலத்து ஆவணங்களைக் குறிக்க VPP எனவும், ஒல்லாந்தர் காலத்தைக் குறிக்க VDP எனவும், ஆங்கிலேயர் காலத்தைக் குறிக்க VPB எனவும் குறிப்பிடப்படும். தொகுதிகள் இலக்கத்தில் வழங்கப்படும்.

[3]காண்க, S.G. Perera, *Historical Sketeches*, Jaffna, 1938, p. 176.

[4] காண்க, S.G. Perera, *Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka*, 2005, pp. 49- 64.

[5]காண்க, A. J. B. Antonious, *The Martyrs of Mannar*, Colombo, 1983.

[7] காண்க, VPB II, p. XV.

[8] காண்க,VPP III, p. XV.

[9] 1703இல் ஆயர் சாள்ஸ் தோமா மைலர் தெ ரூணோ (Charles Thomas Maillard de Tournon) அந்தியோக்கியத் திருத்தந்தையாகவும் நியமனம் பெற்றவர் திருத்தந்தை XI ஆம் கிளமெண்ற் என்பவரால் இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் பண்பாட்டு மயமாக்கல் பற்றியும், இலங்கையில் வாஸ் அடிகளின் பணிகள் பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கும் படி அனுப்பப்பட்டவர். சீனாவில் இவரது செயற்பாடுகளால் ஆத்திரமடைந்த சீனச்சக்கரவர்த்தி இவரைச் சிறையிலிட்டார். சீனாவில் சிறையில் மரணித்தார் இதற்குச் சில காலங்களுக்கு முன்பு கர்தினாவாக இவர் பதவி உயர்த்தப்பட்டார். VPD. I. p. 243.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[10] VPD I, P. 243.

[11] காண்க, W. L. A. Don Peter, *Star in the East*, Colombo, 1995, p.20.

[12] மேலது.,

[13] மேலது, பக். 15.

[14] மேலது, பக். 16.

[15] மேலது.,

[17] S.G. Perera, *Life of Blessed Joseph Vaz*, p. 12.

[18] ஞா. பிலேந்திரன் (பதிப்பாசிரியர்), இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப் வாஸ் வாழ்வும், பணியும், யாழ்ப்பாணம், 2010, பக். XX– XXI. இது எஸ்.ஜி. பெரேரா ஆங்கிலத்தில் எழுதிய *Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka* என்னும் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

[19]காண்க , Bede Barcatta, *A History of the Southern Vicariate of Colombo*, Sri Lanka. Montefano Publications Kandy, 1991, pp. 8 – 13.

[20]சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, மல்லாகம், காரைதீவு, பளை, முகமாலை, அம்பனை, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் இயேச சபைக்குருமார் பணியாற்றினர். காண்க, S. G. Perera, The *Jesuits in Ceylon*, Madurai, 2006 pp. 88 – 93.

[21] சில்லாலை என்னும் கிராமத்தில் மிகவும் பிரமாணிக்கமுள்ள சில கத்தோலிக்கர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இயேசு சபைக்குருக்களிடம் கத்தோலிக்க மறை, திருவருட்சாதனங்கள் பற்றி அறிவைப் பெற்றவர்கள். இயேசு சபையினரின் மறைக்கல்வியைப் பற்றி நண்பர்களும். எதிரிகளும், ஏன் பிலிப்புஸ்தேயுஸ் முதலாக அதிகம் பாராட்டியுள்ளனர். பண்டத்தரிப்பிலுள்ள இயேசுசபையினர் அங்கு பணியாற்றிய காலத்தில் சில்லாலையில் சிறிய ஓர் ஆலயம் இருந்துள்ளது. இயேசு சபையினரின் 1641 ஆம் ஆண்டு அறிக்கையின்படி சில்லாலையில் 395 கத்தோலிக்கர் இருந்துள்ளனர். இக்கிராமம் முழுவதும் கத்தோலிக்கரை மட்டுமே கொண்டுள்ளது. இதனால் கலாபனைகளின் உச்சநிலையிலும் இவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[22]காண்க, W. L. A. Don Peter, *Historical Gleanings*, Colombo, 1992, p. 222.

[23] மேலது, பக். 102 - 107

[24] VPD I, 297

[25] காண்க ஞா. பிலேந்திரன், பக். 281 - 283; VPD I, pp. 527 -29.

[26] திருச்சபை சட்டத் தொகுப்பு, தேடல் வெளியீடு, திருச்சிராப்பள்ளி 2005 பக்.137.

[28] VPD I, p. 249.

[29] காண்க. கா. சிவத்தம்பி, "ஈழத்தில் கத்தோலிக்க தமிழ் இலக்கியப் பாரம்பரியம்", சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும், யாழ்ப்பாணம். 1981. பக். 23

[30] See, Bede Barcatta, pp. 113 – 119.

[31] VPD. II, pp. 351 - 352

[32] மேலது; யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளினால் சிங்கள தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட ஒவ்வொரு நூலினதும் விடயப்பொருளின் சுருக்கம் பின் குறிப்பிடப்படும் நூலில் காணப்படுகின்றது. S.G. Perera, Life of *Father Jacome Gonsalves,* Madurai , 1942, p. 117 – 150.

[34] மேலது.,

[35] காண்க. WLA Don Peter, *Historical Gleanings*, pp. 86 - 89.

[36] 1689 - 92 வரையிலுமான காலப்பகுதியில் பிறகன்சா (Fr.Joao Braganza)மூன்று ஆண்டுகள் வாஸ் அடிகளுடன் இணைந்து புத்தளத்தில் பணியாற்றினார். மூன்று ஆண்டுகளின் பின்பு சுகவீனம் காரணமாக கோவா திரும்பினார். VPD I, pp. 64 –67

[37] காண்க,VPD II, p. 407.

[38] காண்க, Bede Barcatta, p. 111.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[39] மேலது.,

[40] பிரான்சிஸ் சவேரியார் 1542 இந்தியாவின் தென்கரையோரத்திற்கு வந்தபோது அங்கு 20 கிராமங்களைச் சேர்ந்த பரதவகுலத்தவர்கள் கத்தோலிக்க மறையைத் தழுவியிருந்தனர். இவர்கள் 1536 இல் கத்தோலிக்க மறையைத் தழுவியவர்கள் பிரான்சிஸ் சவேரியார் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிறிஸ்தவ சமுகத்திற்கு ஒரு தலைவரை "கணக்குப்பிள்ளை என்னும் பெயரில் நியமித்திருந்தார். போர்த்துக்கேயத்தில் இவரை (Mordomo) என்றழைத்தனர். போர்த்துக்கேய இயேசு சபைக் குருமார் சில்லாலையில் இவ்வாறானதொருவரை நியமித்திருந்தனர் எனக் கொள்வது பொருத்தமானது. காண்க. ஞா. பிலேந்திரன். பக். 61.

[41] **S.G. Perera,** ***Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka***, 2005, p. 201 ஞா. பிலேந்திரன் பக். 217

[43] மேலது பக். 93.

[44] காண்க. WLA Don Peter, *Historical Gleanings*, pp. 74-75.

[45] ஞா. பிலேந்திரன் பக். 158இ 254 -256.

[46] மேலது., பக். 257.

[47] மேலது., பக்.153.

[48] காண்க, Jose, Thayil, " *Pastoral Leadership*" in, Asian Journal for Priests & Religious, vol. 55/4, July 2010, pp. 10 – 12.

[49] காண்க, மேலது.,பக். 16.

[50] காண்க, பவுல் லியோன், *யார் இந்த இயேசு*, வைகறைப்பதிப்பகம், திண்டுக்கல், 1996, பக்.29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. Antonious, A.J.B. *The Martyrs of Mannar*, Colombo, 1983.
2. Barcatta, B., *A History of the Southern Vicariate of Colombo*, Sri Lanka, Montefano Publications, Kandy, 1991.
3. Don Peter, W. L. A. *Historical Gleanings*, Colombo, 1992.
4. Perera, S.G. *Historical Sketeches*, Jaffna, 1938.
5. *Life of Father Jacome Gonsalves*, Madurai, 1942.
6. *Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka*, 2005.
7. *The Jesuits in Ceylon*, Madurai, 2006.
8. Peries, Edmund. *Studies - Historical and Cultural,* Colombo, Catholic Press, 1978.
9. Perniola, V., *The Catholic Church in Sri Lanka*, *The Portuguese Period,* vol, 1505-1565,1989.
10. திருச்சபை சட்டத் தொகுப்பு, தேடல் வெளியீடு, திருச்சிராப்பள்ளி 2005.
11. சிவத்தம்பி, கா. *"ஈழத்தில் கத்தோலிக்க தமிழ் இலக்கியப் பாரம்பரியம்"*, சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும், யாழ்ப்பாணம். 1981.
12. பிலேந்திரன், ஞா. (பதிப்பாசிரியர்), இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப்வாஸ் வாழ்வும் பணியும், யாழ்ப்பாணம். 2010.
13. பவுல் லியோன், *யார் இந்த இயேசு*, வைகறைப்பதிப்பகம், திண்டுக்கல், 1996.



பேராசிரியர். ஞானமுத்து பிலேந்திரன்
B.Th.(Rome), M.Phil., Ph.D.(Jaffna)
தலைவர்/ கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

# யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால்

# ஏற்பாடு செய்யப்பட்ட

## ஆயர் தியோகுப்பிள்ளை அறக்கொடை பேருரைகள்

01. பாலம் அமைத்த பணியாளன் 28-07-2008
உரையாளர் : அருள்பணி. நீ. மரியசேவியார்
தலைமை : அருள்பணி. விக்ரர் பிலேந்திரன்

02. தலைமைத்துவம்- 21ம் நூற்றாண்டை நோக்கி.....ஓர் உளவள ஆன்மீக கண்ணோட்டம் 24-08-2009
உரையாளர் : அருள்பணி. சா. ம செல்வரட்ணம் அ.ம.தி
தலைமை : அருள்பணி. அருளானந்தம் யாவிஸ்

03. அச்சுவேலி எஸ். தம்பிமுத்துப்பிள்ளை வாழ்வும் பணியும் 07-08-2010
உரையாளர் : பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
தலைமை : அருள்பணி. அருளானந்தம் யாவிஸ்

**04. அருளாளர் யோசப் வாஸ்:**
**எதிர்கொண்ட சவால்களும்**
**நிலைநாட்டிய சாதனைகளும்**

**24.10.2011**
**உரையாளர் : பேராசிரியர் வண. ஞா. பிலேந்திரன்**
**தலைமை : அருட்தந்தை ச. இயூஜின் பிரான்சிஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண. பேராசிரியர் ஞானமுத்து பிலேந்திரன் அடிகள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1980இல் மறைந்த ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், யாழ் மறை மாவட்டத்தில் பங்குகளிலும், கல்வி நிறுவனங்களில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். யாழ் மறை மாவட்டத்தின் யோசப்வாஸ் குழுவின் தலைவராக 1994 முதல் பத்து வருடங்களாக பணியாற்றியவர்.

தமிழ்க்கத்தோலிக்க இலக்கியத் துறையிலும், இலங்கைத் திருச்சபை வரலாற்றிலும் அதிக ஈடுபாடு கொண்ட இவர் இத்துறையில் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டதுடன் பல உரைகளையும் நிகழ்த்தியுள்ளார்.

சிறப்புப் பாடமாகக் கிறிஸ்தவ மெய்யியலையும், இறையியலையும் கற்றதுடன், முதுமாணி, கலாநிதிப் பட்டங்களையும் மேற்குறிப்பிட்ட புலங்களில் பெற்றுள்ளார். தற்போது யாழ் கொழும்புத்துறை உயர் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் துறைகளில் இடை வரவு விரிவுரையாளராகவும், யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறையின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இலங்கை மற்றும் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கிறிஸ்தவநாகரிகப்புலத்தில் பேராசிரியர் நிலையில் கடமையாற்றும் தமிழர் இவர் மட்டுமே என்பது குறிக்கத்தக்கதாகும்.

*St. Joseph's Catholic Press, No, 360, Main street, Jaffna Phone: 021 222 2378*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org